FWC

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

Field Work Centre

தவணைப் பரீட்சை, யூலை - 2017
Term Examination, July - 2017

பொருளியல்	**புள்ளித்திட்டம்**	தரம் :- 12 (2018)

பகுதி I

1) 2	6) 1	11) 3	16) 1
2) 2	7) 2	12) 1	17) 1
3) 3	8) 2	13) 2	18) 4
4) 4	9) 3	14) 1	19) 3
5) 2	10) 1	15) 1	20) 1

பகுதி II
பிரிவு“ அ

1)

1. அருமை, மனித விருப்பங்களுடன் ஒப்பிடும் போது அவ்விருப்பங்களை பூர்த்தி செய்வதற்கு தேவையான வளங்கள் பற்றாக்குறையாக இருப்பதே அருமை ஆகும். புள்ளி - 04
2. பொருளாதாரம் அல்லாப் பண்டங்களை குறிப்பிட்ட அளவு காரணிச் செலவினை ஏற்று நுகர்வுக்கு பயன்படுத்தும் போது அது பொருளாதாரப் பண்டமாக மாற்றமடையும். புள்ளி - 02
   a. குடிநீராக மாற்றப்பட்ட கடல் நீர்
   b. மின்விசிறி யூடாக பெறப்படும் காற்று
   c. கிணற்றில் இருந்து பெறப்படும் நீர்
   d. போத்தலில் அடைக்கப்பட்ட நீர்
   e. உருளையில் அடைக்கப்பட்ட வாயு
   f. யன்னல் ஊடாக பெறப்படும் காற்று புள்ளி – 02
3.
   a. சனத்தொகையில் ஏற்படும் அதிகரிப்பு
   b. ஊழியப்படையின் அளவில் ஏற்படும் அதிகரிப்பு
   c. இறுக்கமான கலாச்சார கொள்கையில் ஏற்படும் தளர்வு
   d. சனத்தெகை கட்டமைப்பில் இளைஞர்கள் மற்றும் பெண்களின் என்னிக்கையில் ஏற்படும் அதிகரிப்பு
   e. தொழில் கட்டுப்பாடுகளில் ஏற்படும் தளர்வு புள்ளி - 04
4. குறிப்பிட்ட ஒரு வருடகாலப்பகுதியில் மூலதனச் சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு மூலதனவாக்கம் எனப்படும். அதாவது மூலதன இருப்புடன் மேலதிகமாக சேர்க்கப்பட்ட பெறுமதி முதலீடு எனப்படும். புள்ளி - 02

   பொருட்கள் சேவைகளின் உற்பத்திக்கு மனிதனால் உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்படும் உற்பத்திக் காரணி மூலதனம் எனப்படும். அதாவது இதுவரை காலமும் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் மொத்தப் பெறுமதி மூலதனம் எனப்படும். புள்ளி – 02

agaram.lk

5.

a. தொழில்நுட்பமுன்னேற்றம்
b. முகாமைத்துவ விருத்தி
c. தொழில்ப் பிரிப்பும் சிறப்புத் தேர்ச்சியும்
d. மனிதமூலதன அபிவிருத்தி
 i. கல்வி அபிவிருத்தி
 ii. போசாக்கு விருத்தி
 iii. தோழில் பயிற்ச்சி
 iv. அனுபவம் புள்ளி - 04

2)
1.

a. என்ன பொருளை உற்பத்தி செய்வதென்ற தீர்மானம் எடுத்தல்
b. எவ்வாறு உற்பத்தி செய்தல் என்ற தீர்மானம் எடுத்தல்
c. யாருக்காக உற்பத்தி செய்தல் என்ற தீர்மானம் எடுத்தல் புள்ளி - 03

2.

a. பொருளாதார வளர்சி
b. பொருளாதார சுதந்திரம்
c. உற்பத்தி வினைத்திறன்
d. நிறைதொழில் மட்டம்
e. சூழல் பாதுகாப்பு
f. விலை உறுதிப்பாடு புள்ளி - 05

3.

a. வளங்களின் உடைமையும் உரிமையும் வேறுபடுதல்
b. அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைக்கான தீர்வு முறைகள் வேறுபடுதல்
c. ஊக்குவிப்பு அமைப்பு வேறுபடுதல்

4. காரணி விலை வேறுபடுவதனாலேயே நாட்டு மக்களிடையே வருமானம் வேறுபடுகின்றது வருமானம் வேறு படுவதனாலேயே யாருக்காக உற்பத்தி செய்வது என்ற பிரச்சனை ஏற்படுகின்றது. எனவே யாருக்காக உற்பத்தி செய்தல் என்ற பிரச்சனை ஏற்படுவதற்கு பிரதான காரணம் காரணி விலை வேறுபடுவதே எனக் கூறிக்கொள்ளலாம்.

5.

a. விருத்தி முறை வரியினை விதித்தல்
b. குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு மானியம் வழங்குதல்
c. ஆடம்பரப் பொருட்களுக்கு உயர்ந்த வரியினை விதித்தல்
d. ஏழைகள் நுகரும் பொருட்களுக்கு வரிச்சலுகையினை வழங்குதல் அல்லது பூச்சிய வரியினை விதித்தல்
e. சொத்துக்களுக்கு உச்ச வரம்பு விதித்தல்
f. குறைந்த பட்சக் கூலியினை நிர்ணயித்தல் புள்ளி - 05

3)

1. ஆம், குறுங்காலத்தில் தற்காலிகமாக நாடு உற்பத்திச் சாத்திய வளைகோட்டுக்கு வெளியில் உள்ள புள்ளியில் உற்பத்தியினை மேற்கொள்ள முடியும். புள்ளி - 02
தொழிலாளர்களும் தொழிற் சாலைகளும் மேலதிக நேரம் வேலை செய்வதன் ஊடாக உற்பத்திச் சாத்திய வளைகோட்டுக்கு வெளியில் உள்ள புள்ளியில் உற்றபத்தியினை மேற்கொள்ள முடியும் இருப்பினும் அது நீண்டகாலத்துக்கு நிலைத்திருக்காது. புள்ளி - 02

agaram.lk

2.

அ.



ஆ.



இ.



ஈ.



agaram.lk

உ.



புள்ளி - 05

3.
1. வளங்கள் ஓரினத் தன்மையற்றதாக காணப்படுதல்
2. வளங்கள் பூரண மாற்றுப் பயன்பாடு அற்றதாகக் காணப்படுதல்
3. தொழில்நுட்பம் பூரண மாற்றுப் பயன்பாடு அற்றதாக காணப்படுதல் புள்ளி - 03

4.

அ) 300, 280, 240, 180, 100, 0 புள்ளி - 03

ஆ)



புள்ளி - 03

இ) நாடு அருமைப் பிரச்சனையை எதிர்கொள்ளுகின்றது. புள்ளி - 01

சமூகத்தின் விருப்பத்துடன் ஒப்பிடும் போது அவ்விருப்பத்தினை பூர்த்தி செய்வதற்கு தேவையான வளம் பற்றாக்குறையாகக் காணப்படுவதே அருமை எனப்படும். உற்பத்திச் சாத்திய வளைகோட்டுக்கு வெளியில் உள்ள எந்தவொரு புள்ளியும் வளங்கள் அருமையாக இருப்பதனையே விளக்குகின்றது. புள்ளி - 01

4)

1. உயர்ந்த பட்சக் கட்டுப்பாட்டு விலை

சந்தையில் கேள்வி நிரம்பல் சக்திகளினால் தீர்மானிக்கப்பட்ட சமநிலை விலை நுகர்வோர் நலனை பாதிப்பதாக அரசாங்கம் கருதும் பட்சத்தில் நுகர்வோர் நலனை அதிகரிக்கும் நோக்குடன் குறிப்பிட்ட பொருளை விற்பனை செய்யக் கூடிய ஆகக் கூடிய விற்பனை விலையினை அரசு நிர்னயிப்பதே உயர்ந்த பட்சக் கட்டுப்பாட்டு விலை ஆகும். உச்சவிலையினை அரசாங்கம் சமநிலை விலைக்கு மேல் நிர்னயிக்குமாயின் பொருளாதாரத்தில் எந்தவித தாக்கத்தினையும் ஏற்படுத்தாது மாறாக சமநிலை விலைக்கு கீழ் நிர்ணயிக்கும் போதே பொருளாதாரத்தில் பல தாக்கங்களை ஏற்படுத்தும். புள்ளி - 02



வரைபடத்தின் படி அரசாங்கம் Poஎன்ற இழிவு விலையினை நிர்ணயித்ததும் சந்தையில் $Q_2 - Q_1$ என்ற அளவு மிகைக் கேள்வி ஏற்படும். இவ் மிகை கேள்வியினை நீக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் அவ்வாறு மேற்கொள்ளத் தவறின் பொருளின் விலை சமநிலை விலைக்கு மேலாக அதிகரித்து நுகர்வோர் நலனை பாதிப்பதாக அமையும். எனவே அரசாங்கம் மிகை கேள்வியினை நீக்குவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

2.

1. மிகை கேள்வியை இறக்குமதி செய்தல்
2. பங்கீட்டு முறையில் பொருட்களை விநியோகித்தல்
3. கட்டுப்பாட்டு விலையில் பொருட்களை விற்பனை செய்ய முன்வரும் வகையில் உற்பத்தியாளருக்கு மானியம் வழங்குதல்
4. உற்பத்தி ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் புள்ளி – 04

3.

அ)

Qd = Qs

13000 – 500p = - 2000 + 1000p

15000 = 1500p

P= 10

Qd = 13000 – 500X 10

Qd = 8000Gs;sp - 01

ஆ)

நுகர்வோர் மிகை = $\frac{26-10}{2}$ X 8000 = 64000புள்ளி - 01

உற்பத்தியாளர் மிகை = $\frac{10-2}{2}$ x 8000 = 32000புள்ளி - 01

இ)

பொருளாதார மிகை = நு.மி + உ.மி

= 64000 + 32000= 96000புள்ளி - 01

ஈ)

நுகர்வோன் இழந்து உற்பத்தியாளன் பெற்றது = $\frac{1}{2}$X (7000 + 8000) X 2 = 15000புள்ளி - 01

உ)

சமூகத்துக்கு ஏற்பட்ட நன்மை = $\frac{1}{2}$X 3000 X 2 = 3000புள்ளி - 01

ஊ)

சமூகத்துக்கு ஏற்பட்ட இழப்பு = மொத்த அரச செலவு – ச. ஏ. நன்மை

= 36000 – 3000

= 33000புள்ளி - 01

எ)

நுகர்வோன் செலவு = 12X 7000= 84000புள்ளி - 01

ஏ)

அரச செலவு = 12X 3000=36000 புள்ளி - 01

ஐ)

உற்பத்தியாளன் வருமானம் = 12x 10= 120000புள்ளி - 01

agaram.lk

4.
1. உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்டுள்ள உற்பத்திக் காரணிகளின் பதிலீடுகள் எண்ணிக்கையில் உள்ள வேறுபாடு
2. உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்டுள்ள உற்பத்திக் காரணிகளின் அசையும் தன்மையில் உள்ள வேறுபாடு
3. நிரம்பல் செய்ய எடுக்கும் காலம் பொருளுக்கு பொருள் வேறுபடுதல்
4. களஞ்சியப்படுத்தும் வசதியில் உள்ள வேறுபாடு
5. தொழில் உள்ள நிறுவனங்களின் எண்ணிக்கையில் உள்ள வேறுபாடு
6. தொழில்நுட்ப வசதியின் கிடைப்பனவில் உள்ள வேறுபாடு புள்ளி - 03

5)
1.
a. நிலையான காரணிகள் மாற்றமின்றி காணப்படுதல்
b. தொழில் நுட்பம் நிலையானதாகக் காணப்படுதல்
c. தொடர்ச்சியாக ஊழியர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவதால் ஏற்படும் சலிப்பு

புள்ளி - 03

2. நிலையான காரணிகளை மாற்றமின்றி வைத்துக்கொண்டு மாறும் காரணிகளை அதிகரித்துச் செல்லும் போது மொத்த உற்பத்தியானது அதிகரித்துச் செல்லும் வேகத்தில் அதிகரிக்கும் போது எல்லை உற்பத்தியும் அதிகரிக்கும். மொத்த உற்பத்தியின் அதிகரித்துச் செல்லும் வேகம் உச்சமடையும் போது எல்லை உற்பத்தியானது உச்சமடையும். பின்னர் மொத்த உற்பத்தியானது குறைந்து செல்லும் வேகத்தில் அதிகரிக்கும் போது எல்லை உற்பத்தியானது வீழ்ச்சியடைந்து சென்று, மொத்த உற்பத்தி உச்சமடையும் போது எல்லை உற்பத்தி பூச்சியமாகி மொத்த உற்பத்தி வீழ்ச்சியடையும் போது எல்லை உற்பத்தி எதிர்கனிய நிலையினை அடையும் புள்ளி - 02

நிலையான காரணிகளை மாற்றமின்றி வைத்துக்கொண்டு மாறும் காரணிகளை அதிகரித்துச் செல்லும் போது ஆரம்பத்தில் எல்லை உற்பத்தியும் சராசரி உற்பத்தியும் அதிகரித்துச் செல்லும் ஆனால் சராசரி உற்பத்தி அதிகரிப்பிலும் பார்க்க எல்லை உற்பத்தி அதிகரிப்பானது உயர்வாகக் காணப்படும். ஒரு கட்டத்தில் எல்லை உற்பத்தியானது உச்சமடைந்து வீழ்ச்சியடையத் தொடங்கும் ஆனால் சராசரி உற்பத்தியானது அதிகரித்துச் சென்று உச்சமடைய எல்லை உற்பத்தியானது அதற்கு சமனாகக் காணப்படும். அதன் பின்னர் எல்லை உற்பத்தியும் சராசரி உற்பத்தியும் வீழ்ச்சியடைகின்றன ஆனால் எல்லை உற்பத்தி வீழ்ச்சியடையும் வேகம் சராசரி உற்பத்தி வீழ்ச்சியடையும் வேகத்தினைவிடக் கூடுதலாக காணப்படும். வேறு வகையில் கூறின் சராசரி உற்பத்தி அதிகரித்துச் செல்லும் போது எல்லை உற்பத்தி அதற்கு மேலாகக் காணப்படும் சராசரி உற்பத்தி உச்சம் அடையும் போது எல்லை எல்லை உற்பத்தி அதற்கு சமனாகக் காணப்படும் சராசரி உற்பத்தி வீழ்ச்சியடையும் போது எல்லை உற்பத்தி அதற்கு கீழாகக் காணப்படும். புள்ளி - 02



புள்ளி – 01

agaram.lk

3. சராசரி மொத்தச் செலவு வீழ்ச்சியடையும் போது எல்லைச் செலவு அதற்கு கீழாகக் காணப்படும் சராசரிச் செலவு அதிதாழ்ந்த நிலையில் காணப்படும் போது எல்லைச் செலவு அதற்கு சமனாகக் காணப்படும். சராசரிச் செலவு அதிகரித்துச் செல்லும் பேது எல்லைச் செலவு அதற்கு மேலாகக் காணப்படும். புள்ளி - 02



புள்ளி - 02

4. குறுங்கலத்தில் தொழிற்படும் விதியே எல்லை விளைவு விதி எனப்படும் எல்லை விளைவு விதியானது மூன்று வகைப்படும்
   a. அதிகரித்துச் செல்லும் எல்லை விளைவு விதி
   b. நிலையான எல்லை விளைவு வதி
   c. குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி புள்ளி - 02

குறுங்காலத்தில் உற்பத்தியின் ஆரம்பத்தில் அதிகரித்துச் செல்லும் எல்லை விளைவு விதி தொழிற்படுவதனாலேயே சராசரிச் செலவானது வீழ்ச்சியடைந்து செல்கின்றது. ஒரு கட்டத்தின் பின் குறைந்து செல்லும் எல்லை விளைவு தொழிற்படுவதனாலேயே சராசரிச் செலவானது அதிகரித்துச் செல்லுகின்றது. புள்ளி - 02

5. நீண்டகால சராசரிச் செலவுக்கோட்டின் வடிவத்தை தீர்மானிக்கும் விதி அளவுத்திட்ட விளைவு விதி ஆகும். உள்ளீட்டுக்கும் வெளியீட்டுக்கும் இடையிலான தொடர்பினை விளக்கும் விதி அளவுத்திட்ட விளைவு விதி ஆகும். அளவுத்திட்ட விளைவு விதியானது பின்வரும் மூன்று வகைப்படும்.
   a. அதிகரித்துச் செல்லும் அளவுத்திட்ட விளைவு விதி
   b. மாறா அளவுத்திட்ட விளைவு விதி
   c. நிலையான அளவுத்திட்ட விளைவு விதி

புள்ளி – 04

6)

1. நீண்டகாத்தில் குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு விதி தொழிற்படுவதன் காரணமாக நீண்டகாலச் சராசரிச் செலவு அதிகரித்துச் செல்வதே பொருளாதாரச் சிக்கனம் இன்மை எனப்படும். பொருளாதாரச் சிக்கனம் இன்மை தோன்றுவதற்கான பிரதான காரணங்களாக பின்வருவனவற்றை கூறமுடியும். புள்ளி 01
   a. வளங்கள் அழிவடைதல் அல்லது தேய்வடைதல்
   b. முகாமைத்துவப் பிரச்சனை
   c. தொடர்புபடுத்தல் பிரச்சனை புள்ளி - 03

2.

நிறைபோட்டி	தனியுரிமை
எண்ணிலடங்காத நிறுவனம் காணப்படும்	ஒரேயொரு நிறுவனம் காணப்படும்
பூரண பதிலீட்டுப் பொருள்	தனித்துவமான பொருள்
பூரண பிரவேச சுதந்திரம்	பூரண பிரவேச தடை
நுகர்வோர் பூரண பகுத்தறிவு உடையவன்	நுகர்வோன் பூரண பகுத்தறிவு அற்றவன்

புள்ளி – 04

3.

அ)TC = 700

ஆ)TR = 40 x 10 = 400

இ) உற்பத்தி மேற்கொண்டால் ஏற்படும் நட்டம் = 700 – 400 = 300

ஈ) நிறுவனத்தின் மொத்த நிலையான செலவு 100 ஆகும் எனவே நிறுவனம் உற்பத்தியை நிறுத்துமாயின் நட்டம் நிலையான செலவு மட்டுமே ஆகும். ஆனால் உற்பத்தியை மேற்கொள்ளுமாயின் நட்டம் 300 ஆகும் எனவே நிறுவனம் நட்டத்தினைக் குறைப்பதற்காக உற்பத்தியை நிறுத்த தீர்மானிக்கும்.

புள்ளி - 04

4.

a. சட்டக்காரணிகள்
b. பேரளவு உற்பத்திச் சிக்கனம்
c. நன்மதிப்பு
d. கொள்கை தந்துரோபாயம் புள்ளி – 04

5. ஒரு உற்பத்திக் காரணி பொருளாதார நடவடிக்கை ஒன்றில் ஈடுபடுவதற்காக வழங்கப்படுகின்ற குறைந்த பட்சக் கொடுப்பனவு மாற்றல் கட்டணம் எனப்படும்.

மாறாக ஒரு உற்பத்திக் காரணி பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக வழங்கப்படுகின்ற குறைந்த பட்சக்கொடுப்பனவுக்கு மேலதிகமாக வழங்கப்படும் கொடுப்பனவு சிக்கன வாடகை எனப்படும்.



புள்ளி – 04

7)
1.

a. மொத்த உள்நாட்டு உற்பத்தி
b. பொதுவிலைமட்டம்
c. வேலைமட்டம்
d. சென்மதி நிலுவை
e. நாணய மாற்று வீதம் புள்ளி - 04

2.

நோக்கங்கள்

a. நிறைதொழில் மட்டம்
b. நியாயத்துவம்
c. பொருளாதார உறுதிப்பாடு
d. பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி
e. நிலைத்து நிற்கும் அபிவிருத்திபுள்ளி – 02

கொள்கைகள்

a. நாணயக்கொள்கை
b. இறைக்கொள்கை
c. நிரம்பல் அபிவிருத்தி கொள்கை
d. வருமானக்கொள்கை
e. சர்வதேச வர்த்தகக் கொள்கை
f. நேரடிக் கட்டுப்பாட்டுக் கொள்கை புள்ளி – 02

3. ஒரு நட்டினுடைய உற்பத்தி, வேலைமட்டம், விலைமட்டம் ஆகிய பேரினப் பொருளாதார மாறிகள் மாற்றமடைவதற்கான தூண்டுதல் அற்ற நிலை பேரினப் பொருளாதாரச் சமநிலை எனப்படும். அதாவது மேற்படி பேரினப் பொருளாதார மாறிகள் அதிகரிப்பதற்கோ குறைவடைவதற்கோ தூண்டுதல் அற்ற நிலை பேரினப்பொருளாதாரச் சமநிலை எனப்படும். பேரினப் பொருளாதாரம் சமநிலையில் இருக்க வேண்டுமாயின் பின்வரும் இரு நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் புள்ளி - 02

1. மொத்த வருமானம் மொத்தச் செலவுக்கு சமப்பட வேண்டும்
2. மொத்த உட்பாச்சல் வெளிப்பாச்சலுக்கு சமப்பட வேண்டும் புள்ளி - 02

4.



புள்ளி – 04

5.

"பொருளாதாரத் துறைகளுக்கிடையில் மெய்வடிவில் பரிமாற்றம் இடம்பெறின் அது மெய்ப்பாய்ச்சல் எனப்படும்"



புள்ளி – 02

agaram.lk

அம்புக்குறி – 1 வீட்டுத்துறை உற்பத்திக் காரணிகளை நிறுவனத்துறைக்கு வழங் குவதையும், அம்புக்குறி - 4 நிறுவத்துறையானது பொருட்கள், சேவைகளினை வீட்டுத்துறைக்கு வழங்குவதனையும் காட்டிநிற்கின்றது. இவ் இரு அம்புக்குறிகளும் பொருளா தாரத்தில் மெய் வடிவில் பரிமாற்றம் இடம்பெறுவதனையே காட்டிநிற்கின்றன என்றவகையில் இது மெய்ப்பாச்சல் எனப்படுகின்றது.

"பொருளாதாரத் துறைகளுக்கிடையில் பணவடிவில் பரிமாற்றம் இடம்பெறின் அது பணப்பாய்ச்சல் எனப்படும்"



அம்புக்குறி – 3 நிறுவனத்துறையினால் வீட்டுத்துறைக்கு பண வடிவில் சன்மானம் வழங்கப்படுவதையும். அம்புக்குறி – 4 வீட்டுத்துறை தான் பெற்ற பண வடிவிலான சன்மானத்தினை பொருட்கள் சேவைகளின் கொள்வனவுக்காக செலவிடுவதையும் காட்டி நிற்கின்றன. இவ் இரு அம்புக்குறிகளும் பணவடிவில் பரிமாற்றம் இடம்பெறுவதையே காட்டிநிற்கின்றன என்ற வகையில் இது பணப்பாய்ச்சல் எனப்படுகின்றது.

புள்ளி – 02

agaram.lk

8)
1.

a. நுகர்வுச் செலவு
b. முதலீட்டுச் செலவு
c. அரச கொள்வனவு
d. தேறிய ஏற்றுமதி

புள்ளி - 02

2. உற்பத்தியாளர் பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்து விற்பனைக்கு தயாராக வைத்திருக்கும் நிலையில் அறவிடப்படும் விலைகளே அடிப்படை விலைகள் ஆகும். அதாவது கொள்வனவாளரால் உற்பத்தியாளருக்கு செலுத்தப்படும் விலை ஆகும்.

உற்பத்தியின் மீது நேரடியாக அறவிடப்படும் வரிகள் அடிப்படை விலைகளுடன் கூட்டப்பட்டு வழங்கப்படும் மானியங்கள் அதிலிருந்து கழிக்கப்படுவதன் மூலம் உற்பத்தியாளர் விலை பெறப்படும்.

குறித்த பொருட்கள் சேவைகளுக்காக நுகர்வோன் உண்மையில் செலுத்தும் விலை கொள்வனவாளர் விலை ஆகும். உற்பத்தியாளர் விலையுடன் போக்குவரத்துச் செலவு வனிக விளிம்பு மற்றும் நுகர்வோன் செலுத்தவேண்டியிருக்கும் வரிகள் என்பவற்றை கூட்டுவதன் மூலம் பெறப்படும் விலை கொள்வனவாளர் விலை எனப்படும். புள்ளி – 04

3.

1. கொடுப்பனவு இன்றி வீட்டில் மேற்கொள்ளப்படும் வீட்டுச் சேவைகள்
2. இலவசமாக கிடைக்கும் இயற்கை வளங்கள் நிலம் நீர் காற்று
3. கற்றல் மற்றும் ஓய்வு
4. விலை மாற்றம் காரணமாக அல்லது இயற்கை வளர்ச்சி காரணமாக வளங்களின் பெறுமதியில் ஏற்படும் அதிகரிப்பு புள்ளி - 04

4. சொத்துக்களை உரிமை கொள்வது பொறுப்புக்களை ஏற்றல் பொருளாதாரச் செயற்பாடுகளில் ஈடுபடல் மற்றும் ஏனைய நிறுவன அலகுகளுடன் தொடர்புகளைப் பேணும் பொருளாதார அலகு நிறுவன அலகு என அழைக்கப்படுகின்றது.புள்ளி – 05

பொருளாதாரப் பரப்பொன்றில் பின்வரும் 5 வகை நிறுவன அலகுகள் செயற்படுகின்றன.

1. நிதிநிறுவனம் அல்லாக் கூட்டுத்தாபணங்கள்
2. நிதிக் கூட்டுத்தாபணங்கள்
3. அரசாங்கத்துறை
4. வீட்டுத்துறைக்கு சேவை வழங்கும் இலாப நோக்கமற்ற நிறுவனங்கள்
5. குடும்ப அலகுகள்

5.

அ)

மொத்த தொழிற்பாட்டு மிகை = தே.தொ. மிகை + க.வ+ நி.மூ.நு

= 200 + 150 + 175

= 525

ஆ)

அ.வி.கூ.பெ.=ஊ.ந.ஈ + மொ.தொ.மிகை + உ. மீதான உ.தொ.கழித்த ஏனைய வரிகள்

= 100 + 525 + 125

= 750

இ)

ச. வி. மொ.உ.உ = அ.வி.கூ.பெ + தேறிய நேரில் வரி

= 750 + 75

= 825

ஈ)

மொ. தே.உ = ச.வி. மொ.உ.உ + மு.வ.நி

= 825 + 25 = 850

உ)

செ. கூ. மொ. தே.வ = மொ.தே.உ + இ.வ.நி

= 850 + 10 = 860 புள்ளி - 05

agaram.lk